சுருக்கம்

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் – குடியிருப்புகள் ஒதுக்கீடு – திருநங்கைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி(கு.மா1(1))த் துறை

அரசாணை (2D) எண். 202

நாள் 22.12.2015
மன்மத வருடம், மார்கழி 6,
திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்கப்பட்டது:

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய மேலாண்மை இயக்குநரின் கடித ந.க.எண்.ஜி8/17426/2013, நாள்.15.09.2014 (ம) 31.12.2014.

= = = = =

ஆணை:

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய மேலாண்மை இயக்குநர் தனது கடிதத்தில், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலமாக திருநங்கைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்தல் தொடர்பாக, சமூக நலத்துறையால் திருநங்கைகள் எனக் கண்டறியப்பட்டு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ள 260 (இருநூற்று அறுபது) நபர்களின் விவரங்களை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் நிர்ணயித்துள்ள படிவத்தில் பூர்த்தி செய்து சென்னை மாவட்ட சமூக நல அலுவலர் அனுப்பியுள்ளார் எனவும், தமிழ்நாடு திருநங்கை அமைப்புப் பிரதிநிதிகள் சென்னை மாநகராட்சி மேயர் அவர்களிடம் இது குறித்து மனு ஒன்றினை அளித்துள்ளனர் எனவும், இம்மனு மேயர் அவர்களின் 24.12.2013 தேதியிட்ட கடிதத்துடன் மேல்நடவடிக்கைக்காக வாரியத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது எனவும், இம்மனுவில் திருநங்கைகளுக்கு தமிழக அரசு பிரதிமாதம் ரூ.1,000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) உதவித்தொகை வழங்கி வருகின்றது என்றும், சென்னையில் உள்ள திருநங்கைகள் வசிக்க சொந்த வீடு இல்லாமல் பல இன்னல்களுக்கு ஆளாகின்றனர் என்றும், கூவம் ஆற்றின் ஓரத்தில் வாடகை வீட்டில் வசித்து வருவதாகவும், வீட்டு உரிமையாளர்கள் இருமடங்கு வாடகை வசூலிக்கின்றனர் என்றும், தமிழ்நாடு திருநங்கைகள் அமைப்புப் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

2. திருநங்கைகளின் வாழ்க்கை குறித்து, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய எஸ்டேட் அலுவலர் மூலமாக விசாரணை செய்ததில், திருநங்கைகள் வாடகை வீட்டில் வசித்துவருவதாகவும், அவர்களுடைய பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் யாரும் அவர்களை வீடுகளில் சேர்ப்பதில்லையென்றும், சமூக விரோதிகளால் நிரந்தரமாக ஒரே இடத்தில் வாடகை வீட்டில் தங்கியிருக்க இயலவில்லையென்றும், சில சமயங்களில் வாடகை வீட்டின் உரிமையாளர்கள் திடீரென காலி செய்ய வற்புறுத்துவதாக தெரியவந்துள்ளது எனவும், திருநங்கைகள் அரசு வழங்கும் உதவித்தொகை ரூ.1,000/–ஐ கொண்டு கடைகள், வியாபார ஸ்தலங்கள், ரயில்கள் மற்றும் பேருந்துகளில் கைதட்டி, பொதுமக்கள் கொடுக்கும் பணத்தைக் கொண்டு பிழைப்பு நடத்தி வருவதாக விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

...2...

3. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய மேலாண்மை இயக்குநர் மேலும், தனது கடிதத்தில், திருநங்கைகளுக்காக சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 03.12.2014 அன்று நடத்தப்பட்ட கருத்தரங்கில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 260 பயனாளிகளுக்கும் குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்ய ஆவன செய்யப்படும் எனத் தெரிவித்துள்ளதாகவும், எனவே, மொத்தமுள்ள 260 திருநங்கைகளில் ஏற்கனவே விசாரணை செய்து அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்ட 23 நபர்கள் போக மீதமுள்ள 237 நபர்களிடமும் எஸ்டேட் அலுவலர் மூலமாக விசாரணை மேற்கொண்டு அவர்களில் தகுதியுடைய அனைத்து நபர்களுக்கும் குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்ய 260 நபர்களின் பட்டியலை அரசுக்கு அனுப்பி, இதுகுறித்து அரசின் ஆணை வேண்டியுள்ளார்.

4. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்களின் கருத்துருவினை அரசு கவனமாகப் பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப் பின், சென்னையில், சமூகநலத்துறையால் திருநங்கைகள் எனக் கண்டறியப்பட்டு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ள மொத்தமுள்ள 260 திருநங்கைகளில் ஏற்கனவே விசாரணை செய்து அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்ட 23 நபர்களுக்கும், மீதமுள்ள 237 நபர்களில் குடிசை மாற்று வாரிய எஸ்டேட் அலுவலர் மூலமாக விசாரணை மேற்கொண்டு அவர்களில் தகுதியுடைய நபர்களுக்கும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்ய அரசு ஆணையிடுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

தர்மேந்திர பிரதாப் யாதவ்
அரசுச் செயலாளர்

பெறுநர்

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், சென்னை–5.

<u>நகல்</u>

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி (ம) வேளாண்மை) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாவட்ட ஆட்சியர், சென்னை–1.
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, சென்னை–9.
அரசுச் செயலரின் முதுநிலை தனிச்செயலர், வீட்டுவசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித்துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு/சுத்தநகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்